உ

குகமயம்

யாழ்ப்பாணத்து நல்லூர்,

கந்தசுவாமி

பஞ்சரத்தின

உடுவில்

தமிழ்ப் புலவர்,

பிரசங்க சயாமணி

வ. மு. இரத்தினேசுவர ஐயர்

இயற்றியது

1952

முகவுரை

செந்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் கருணைக் கடலான கந்தசுவாமி மீது அடியேன் ஐந்து பாடல்களைப் பாடியுள்ளேன். முன்பு அச்சிட்ட பிரதிகள் செலவழிந்தன. பின்னும் வேண்டுமே என்று அன்பர்கள் கேட்டனர். ஒரு அச்சாபீஸ் அதிபர் அச்சிடுவதாக ஏமாற்றி விட்டனர். அதுவும் இறையருளே. கொழும்புமாநகரில் வசிக்கும் இந்தியாவிலுள்ள திருநெல்வேலி ம-ள-ள- ஸ்ரீ-M. சுப்பிரமணிய ஐயரவர்கள் இப்பதிப்பு வெளிவர உதவியாயினர். கல்வியறிவு, பொறை, இரக்கம் முதலியன திகழவாழும் ஐயரவர்களின் அறப்பண்புகள் பாராட்டற்பாலன. அவர்கள் வம்சவிருத்தியுடன் பல்லாண்டுவாழ்க. பிரசங்கரத்தின வெளியீட்டு உதவியாளர், சைவசித்தாந்தப் பெருநெறியாளரும் பெருநிலக்கிழாருமான, பிக்ஷாண்டார் கோயில், உயர் திரு. ம்கா. இராஜகோபாலப்பிள்ளையவர்கள் உதவி, எனது தளர்ந்த நிலைவளம் பெற ஆதாரவாகவுள்ளமையையும் ஈண்டுக் குறிப்பிடுதல் அவசியமாயிற்று. சகல சம்பத்துடன் அவர்களும் நீடுவாழ்க. சுபமஸ்து!

உடுவில் — குகதாசன்

4—7—52. — வ. மு. இரத்தினேசுவரன்

பஞ்சரத்தினம்.

காப்பு.

ஈட்டும் வினைநீக்கி கின்பமுற வேயெனது
பாட்டுக் குவந்தருளைப் பாலிக்கும்—கோட்டுமுகத்
தைந்துகர நால்வாய்கொண் டன்பாக இன்பநேர்
தந்துதவு வோன்சதங்கைத் தாள

ஆசிரிய விருத்தம்.

மணியுலாவிய மகுடமோடுமகர குண்டலமும்
வளர்நேமி மடை திறந்து
வருவெள்ள மென்கருணை பொழிவிலோசனமுமொளி
வாய்ந்த செம் பவளவாயும்
திணியுலாவியசந்த பாளிதத் தோளுமுயர்
செவ்விதரு பாதசாலங்
திகழ்சரண விரிநளின வொளியுமெளி யேன்கண்டு
தெரிசிப்ப தெந்நாளோ?
பணியுலா வியவாட கைச்சாடு மௌலிநம்
பரமனருள் துய்யபாலா!

பசாரிய கதிர்காம நகரிலுறை ஈசனே!
　　பற்றுசெங் கதிர்வேலனே!
அணியுலா வியதேவ யானைமண வாள! சே
　　ணார்ந்திடு சோலைசூழ்ந்த
அழகியநல் லூர்வாச! குமரகுருபரநேச!
　　அமரர்பணி முருகேசனே. (க.)

மருளெனுஞ் சாலப்புணர்த்திலேம் புலனெனும்
　　மாயைவழி யதனிலோடி
வருபுண்ட ரீகமெனவேயுழன் றநுதினமும்
　　வாடுமெளி யேன்றனக்கும்
பொருளிதென் றுணருவகை காட்டிநின் கழலினெறி
　　பூட்டியருள் செய்வதரிதோ?
புன்மையே ரின்சரண மன்றிவே றொன்றையும்
　　புவிதனிற் போற்றுகில்லேன்
தெருளுமா தவநெறியி னுயர்கும்ப முனிதொழும்
　　சிற்பரா னந்தனே! மீத்
திகழுமொரு பெருஞான கதிர்காம நகரிலுறை
　　தேவனே! தமியனேற்கும்
அருள்புரிய வேண்டுமுய ரீண்டத்தோடு முகில்கள்
　　அணுகுபொழின் மேவிவாழும்
அழகியநல் லூர்வாச! குமரகுரு பரநேச!
　　மரர்பணி முருகேசனே. (உ)

பண்டசுரர் குலமாய வந்திடுந் தூயனே
பகடேறி வருமறலிவேம்
பாசக்தோடாம ஊழ்வினையென்னு மிகுகொடிய
பரவையி லகப்படாமல்
வண்டற் பயோதரக் குழலார்க ளநுராக
வலைதனிற் சிக்கினேற்கு
வயங்குநின் னடிமுளரி யிந்தேன தகக்கீத
மருவவர மீந்தருளுவாய்
தெண்டிரைச் சலதியுடை படமேருவுந் நடுங்கவே
செய்யவேல் கொண்ட நாதா!
திகழ்ஞான ளமேவு கதிர்காம நகரிலுறை
சின்மயா நந்தம்போதா!
அண்டினரை யாதரித் தருள்புரி விநோதனே
அளவில் பூஞ்சோலை சூழ்ந்த
அழகியநல் லூர்வாச குமரகுரு பரநேச!
அமரர்பணி முருகேசனே. (ரு.)

தோடருமா ணவமாயை காமியமென் மும்மலத்
தோல்லுலகை சூழடவியிற்
சுழலாம லஞ்சலேன் றடியேனை யாளுவாய்
சுருதிபுகழ் பரிபூரணா!
தடவிஜய முகபடக் கரடகட விகடமா
தங்கவதனன் றுணைவனே!

சடாக்ஷரகுகேச தேஜோமய விசாகனே!
தமியனேன் மிடியொழிப்பாய்
வடமல்கு குங்குமச்சேருடி வளர்கொங்கை
வள்ளிதெய் வானையுடனே
மகிழ்தீர! கதிர்காமப் பதிமேவு தேவனே!
மரகத மயூரனேமுன்
அடல்கொண்டு வருகின்ற அசுரர் சம்மாரனே!
அளவில்நல் லடியர் வாழும்
அழகிய நல்லூர்வாச! குமரகுருபரனே
அமரர்பணி முருகேசனே!

கமலமா மலரயனு மணியுரக சயனனும்
காணரிய அமலனார்தம்
காதிலுப தேசமொழி ஓதுநின் கருணைநிகர்
காட்சியே எளியனேன் வேண்டினேன்
விமலசிவ சண்முகா சரவண பவாநினது
மெய்யன்பர் மாண்பு பேணு
வெறியனேன் கொடிய வெங்கன்மத்தி லலையாமல்
வீறுபெற் றினிதுய்யவிச்
சமயங் காடஷமது தந்தருளுவாய் உளர்
சதாநந்த ஓங்காரனே!
தயங்கருட் கதிர்காம பதியிலுறைதேவனே
தலைமைசேர் புலமையோனே

அமிர்தரசமொழுகுசெந் தமிழுறும் புலமையே
அடியனேற் கருளவேண்டும்
அழகிய நல்லூர்வாச குமரகுருபரநேச
அமரர்பணி முருகேசனே. (௫

சண்முக ஷட்கம்.

1. சரணாகதமா துரமாதிஜிதம்
கருணாகர காமத காம ஹதம்!
சரகாநந ஸம்பவ சாருசிதம்
பரிபாலய தாரக மாரகமாம்!!

2. ஹரசாரஸமுத்பவ ஹைமவ
கரவல்லவ வாலிதக மிருதநோ!
முரவைரி விரிஞ்சி முதம்பு நிதே
பரிபாலய தாரக மாரகமாம்!!

3. பகுளாசுத சாயக பிர்ருகிரே
சுரஸிந்து தனூஜ சுவர்ணருசே!
சிகிவாக நதேவ ஸமூகபதே
பரிபாலய தாரக மாரகமாம்!!

4. சாதிந்து ஸமாந சடாநநயா
சரஸீருக சாரு விலோசநயா
நிருபாதிகயா நிஜபாலதயா
பரிபாலய தாரக மாரகமாம்!!

5. ஜயவிப்ர ஜநப்ரிய வர நமோ
ஜயபக்த பராயண பத்ர நம!
ஜயசாக விசாக குமார நம:
பரிபாலய தாரக மாரகமாம்!!

9 பரிதோ பவமே புரதோ பவமே
பதிமே ஸததம் குகரமாம்!
விதராஜி ஷணமே விஜயம் பகவன்
பரிபாலய தாரக மாரகமாம்.

7. இதிகுக்குட கேது மருஸ்மரதாம்
படதாமிஹ ஷண்முக ஷட்கமிதம்!
நமதாம்பி நடிந்தந மிந்துபிருதோ
நபயம் க்வசித் அஸ்தி சரீர பிருதாம்!!

குமர நாயகனின் குன்றாத அருள்.

அமரநாயகன் துயரும், அவனிவாழ் மக்கள் மயலும் அகல அவதரித்தவர் குமரநாயகன் என்பர். குழந்தைவடிவு குன்றாத அருளினையுடையது. இந்திரனை விட்டுப் பின்பு எழச் செய்தமையால் எளிதல் உணரலாம். நக்கீரர் போன்ற மெய்யன்பர்களுக்கு நல்லருள் பாலித்தமை குன்றமெறிந்த வென்றிவேற் பெருமானருளேயாம். அருணகிரிநாதர் அடியிணை மறவாத உத்தமர் அவர். அல்லல தீர்த்து ஆண்ட தண்ணருள் எண்ணில் அடங்காது.

பிர்ம, விஷ்ணு, இந்திராதிபிர்ஸேவிதம் என்று சுத்த சாதாசிவப் பெருமானை போற்றப்படுவார் ஐந்து முகங்களோடு அதோ முகமாகிய பிரணவமுகம் கூடி ஆறுமாமுகப் பெருமான் உருவத் திருமேனி கொண்டருளினார்

ஐந்தரு நீழலில் அரசு வீற்றிருக்க. இந்திர குமாரனாகிய சயந்தனையும அருண்மழை பொழிந்து காத்தவர் குமரநாயகனே.

சூரபன்மன் முதலிய அசுரர்களை அழித்து ருமரரை விண்குடி யேற்றியமை கந்தசுவாமியின் ருணையேயாம்.

திர்காமப்பதி மான்மியம் கருத்திலடங்காது. ஜோதிஷ் காமாசலம்’’ என்று வடநூல் கூறும் நல்லூர், செல்வச்சந்நிதி போன்ற தலங்களின் மகிமை சைவத் திருநெறியாளர்கள் அறிந்ததே. குமரநாயகன் குன்றாதபேரருளை வழுத்தி வாழ்வோமாக.